16

# அல் இஜ்திஹாத்

﴿ يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا أَطِيعُوا اللَّهَ وَأَطِيعُوا الرَّسُولَ وَأُوْلِي الْأَمْرِ مِنْكُمْ فَإِنْ تَنَازَعْتُمْ فِي شَيْءٍ فَرُدُّوهُ إِلَى اللَّهِ وَالرَّسُولِ.... ﴾

'விசுவாசிகளே! நீங்கள் அல்லாஹ்வுக்கு வழிப்பட்டு நடவுங்கள். அவ்வாறே அல்லாஹ்வுடைய தூதருக்கும், உலுல் அம்ர்களுக்கும் வழிப்பட்டு நடவுங்கள். (விசுவாசிகளே) உங்களுக்குள் ஏதாவதொரு விடயத்தில் பிணக்கு ஏற்பட்டால் அதனை அல்லாஹ்விடமும் (அவனுடைய) தூதரிடமும் ஒப்படைத்துவிடுங்கள்' ( 4 அன் நிஸா :59)

இஸ்லாத்தின் மூலாதாரங்களை அடிப்படை மூலாதாரங்கள் எனவும், துணை மூலாதாரங்கள் எனவும் இரண்டாக வகுப்பர். அல்குர்ஆனும் ஸுன்னாவும் அடிப்படை மூலாதாரமாக அமைய, அந்த இரண்டிலிருந்தும் இஜ்திஹாத் மூலம் பெறப்பட்ட மூலாதாரங்கள் துணை மூலாதாரங்கள் எனப்படுகின்றன. இவை காலத்துக்குக் காலம் தோன்றக் கூடிய சட்டச் சிக்கல்களைத் தீர்த்து வைக்க மேற்கொள்ளப்படும் இஜ்திஹாத் நடவடிக்கைகளின்போது அடிப்படை ஆதாரங்களுக்குத் துணையாக அமைகின்றன.

'இஜ்திஹாத்' என்ற சொல் 'ஜஹத' என்ற மூலச் சொல்லிலிருந்து பிறந்ததாகும். இதன் கருத்து முயற்சித்தல் என்பதாகும். புதிய பிரச்சினையொன்று தோன்றி அதற்கான தீர்வை அல் குர்ஆனோ, ஸுன்னாவோ நேரடியாக வழங்கியிருக்காதபோது அல் குர்ஆனிலும் ஸுன்னாவிலும் ஆழமான அறிவுள்ளவர்கள் அவ்விரண்டையும் அடிப்படையாக வைத்துத் தீர்வினைப் பெறுவதற்காக மேற்கொள்கின்ற ஆய்வு முயற்சியையே இது குறிக்கின்றது. இந்தப் பணியில் ஈடுபடுவோர் முஜ்தஹிதுகள் என அழைக்கப்படுகின்றனர்.

இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரங்களின் ஆழமான கருத்துக்களிலிருந்து ஷரீஆ எதிர்கொள்ளும் நடைமுறைப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைப் பெறுவதற்கு ஒரு சட்டத்துறை அறிஞர் தனது ஆற்றல்களைப் பிரயோகிப்பதே இஜ்திஹாத் என இமாம் ஷவ்கானி வரைவிலக்கணப்படுத்துகிறார்.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உயிர்வாழ்ந்து கொண்டிருந்த போதும், அவரது சமூகத்தில் புதுப் பிரச்சினைகள் தோன்றின. குறிப்பிட்ட அப்பிரச்சினைகளுக்கான தீர்வை அல்லாஹ் வஹி மூலம் அறிவித்தான். சிலபோது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவற்றுக்கான தீர்வுகளை முன்வைத்தார்கள்.

முஆத் இப்னு ஜபல் ரழியல்லாஹு அன்ஹு அவர்களை யமனுக்கு கவர்ணராக அனுப்பியபோது, 'உங்களிடம் புதிய பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டால் எவ்வாறு தீர்ப்பளிப்பீர்கள்?' என வினவினார்கள். அப்போது 'அல்லாஹ்வின் கலாமாகிய அல்குர்ஆனில் கூறப்பட்டிருப்பதுபோல் தீர்ப்பளிப்பேன்' என்றார்கள். 'அதில் காணப்படாவிட்டால்?' என்று கேள்வி எழுப்பியபோது, 'அல்லாஹ்வின் தூதரின் முன்மாதிரியிலிருந்து பெற்றுக்கொள்வேன்' என்றார்கள். 'அதிலும் தீர்ப்புக் கிடைக்காதுபோனால்?' எனக் கேட்கப்பட்டபோது, 'அவ்விரண்டையும் அடிப்படையாகக்கொண்டு இஜ்திஹாத் செய்து தீர்ப்பளிப்பேன்' என்றார்கள். அவ்வேளை 'அல்லாஹ்வின் தூதரின் தூதருக்கு இவ்வாறான தீர்வுக்கு உதிப்பை ஏற்படுத்திய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்' (திர்மிதி) என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வாழ்த்துத் தெரிவித்தார்கள்.

இது தவிர, ஸஹாபாக்கள் இஜ்திஹாத் காண்பதற்கான வெவ்வேறு சந்தர்ப்பங்களையும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஏற்படுத்திக்கொடுத்து பயிற்சி அளித்துள்ளார்கள் என்பதற்கு பல சான்றுகள் உள்ளன.

''விசுவாசிகளே! நீங்கள் அல்லாஹ்வுக்கு வழிப்பட்டு நடவுங்கள். அவ்வாறே அல்லாஹ்வுடைய தூதருக்கும், உலுல் அம்ர்களுக்கும் வழிப்பட்டு நடவுங்கள். (விசுவாசிகளே) உங்களுக்குள் ஏதாவதொரு விடயத்தில் பிணக்கு ஏற்பட்டால் அதனை அல்லாஹ்விடமும் (அவனுடைய) தூதரிடமும் ஒப்படைத்துவிடுங்கள்'' (4 அந்நிஸா:59) என்ற அல்குர்ஆன் வசனத்தில் இடம்பெற்றுள்ள 'உலுல் அம்ர்' எனப்படுபவர்கள் முஜ்தஹித்களாவர் என முபஸ்ஸிரீன்கள் விளக்கமளித்துள்ளனர்.

முஜ்தஹித்கள் தக்வாவும் நன்னடத்தையுமுள்ள முஸ்லிம்களாக இருப்பதுடன் நுண்மதி, அரபு மொழியில் பாண்டித்தியம், அல்குர்ஆன் ஸுன்னாவில் ஆழமான அறிவு, அவற்றுடன் தொடர்புடைய கலைகளில் நிபுணத்துவம், முன்னய முஜ்தஹித்களின் இஜ்திஹாத் பற்றிய விளக்கம், ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பிரச்சினைகள் பற்றி தெளிவு முதலான தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

'ஒரு முஜ்தஹித் இஜ்திஹாத் செய்து அவரது முடிவு சரியாக அமைந்தால் அவருக்கு இரண்டு கூலிகள் உண்டு. இஜ்திஹாத் செய்து அவரது முடிவு பிழையாக அமைந்துவிட்டால் அவருக்கு ஒரு கூலி உண்டு' (புஹாரி) என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டுள்ளமை, தகுதியானவர் இஜ்திஹாத் பணியில் ஈடுபடுவதை ஊக்குவிப்பதாக அமைந்துள்ளது.

**பாடத்தில் இடம்பெற்றுள்ள அரபுச் சொற்கள்**

❁ الاِجْتِهَادُ ❁ جَهَدَ ❁ المُجْتَهِدُ ❁ أُولِى الْأَمْرِ

**பயிற்சி**

1. இஜ்திஹாத் என்ற சொல்லின் கருத்தை விளக்குக.
2. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இஜ்திஹாத் செய்வதற்கு அனுமதித்துள்ளார்கள் என்பதற்கான இரண்டு ஆதாரங்களைத் தேடி எழுதுக.
3. முஜ்தஹித்கள் பெற்றிருக்க வேண்டிய தகைமைகளைப் பட்டியற் படுத்துக.